சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை - 08

ந.க.எண் 1096/அ5/2022 நாள் 17 02 2023

பொருள் தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத்தேர்வு பிப்ரவரி 2023 - தேர்வு மைய பெயர்ப் பட்டியலை மற்றும் தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகள் பதிவிறக்கம் செய்தல் - சார்ந்து.

பார்வை அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 26028/டி3/2022 நாள் 17.02.2023

----------

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது, தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு பிப்ரவரி 2023 NMMS விண்ணப்பித்த மாணவர்களின் பெயர்ப்ட்டியலினை தேர்வு மையம் வரியாக https://dge1.tn.gov.in. 17.02.202 அன்று முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் . என அரசுத்தேர்வு இயக்ககம் தெரிவித்துள்ளது.

தேர்விற்கான தேர்வுச்கூட நுழைவுச்சீட்டுக்களை 17.02.2023 அன்று பிற்பகல் முதல் சம்பந்தப்பட்ட https://dge1.tn.gov.in பள்ளித் தலைமையாசிரியர்கள் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password -ஐ பயன்படுத்தி தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் மற்றும் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை மாணவர்களுக்கு வழங்கவும் தேர்வு மைய விவரத்தினை மாணவர்களுக்கு தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தேர்வர்களின் தேர்வு கூட நுழைவுச் சீட்டுக்களில் பெயர் / பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் ஏதும் இருப்பின் தவறினை சிவப்பு நிற மையினால் சுழித்து சரியான திருத்தத்தினை குறிப்பிட்டும் , ஒளிப்படம் (photo) மாறியிருப்பின் தேர்வரின சரியானஒளிப்படத்தை உரிய இடத்தில் ஒட்டி பள்ளி தலைமையாசிரியர்கள் சான்றொப்பம் மற்றும் பள்ளி முத்திரையுடன் தேர்பெழுத அனுமதித்திட தேர்வு மைய முதன்மைக்கண்காணிப்பாருக்கு அறிவுறுத்துமாறு மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இணைப்பு அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம்

ஒப்பம் /-

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1 அனைத்து உயர்நிலை./ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் சென்னை மாவட்டம்

2 அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம் ,

நகல்

1 அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது

2 அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner